1978 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாமணி உர ஆலையிலுள்ள விஷயங்களைப் பற்றி கடந்த மூன்று மாதங்களாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல விவரங்களை என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் செவிமடுத்துக் கேட்டு அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறேன். தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதிலும் தமிழக அரசு உறுதியாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) ஆம் பழைய உறுப்பினர்—நான் புதியவன்—உறுப்பினர் அவர்கள் நீண்டநாள் அனுபவம் பெற்றவர்—அவர்களுக்கு இந்த விவரத்தை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆட்சிமொழிக் குழு

*வினா எண் 44—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் ஆட்சி மொழிக்குழு தனது பணியை எந்த அளவுக்கு முடித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவைமுன் ஒரு அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தரப்படுத்தப்பட்ட தமிழ் தட்டச்சுப் பொறியினை உருவாக்கியதோடு, அதனை உற்பத்தி செய்து அரசு அலுவலகங்களுக்கு வழங்க ஆவன செய்தது என்ற பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படி தரப்படுத்தப்பட்ட தமிழ் தட்டச்சுப் பொறியினை உருவாக்கிய நேரத்தில், தந்தை பெரியார் அவர்கள் தமிழகத்திலே உருவாக்கிய எழுத்துச் சீர்திருத்தத்தை இந்தத் தட்டச்சுப் பொறியில் பயன்படுத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி அரசு முடிவெடுத்த பிறகுதான், அதை எப்படிப் பயன்படுத்துவது என்கின்ற நிலைமை வர முடியும்.

---

* 608-609 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1978 செப்டம்பர் 2

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, மன்னார்குடி நீதித் துறை 2-ஆம் வகுப்பு நடுவர் திரு. ஆறுமுகம் என்பவர் ஒரு வழக்கில் தமிழில் தீர்ப்புக் கூறியிருக்கிறார். தமிழில் தீர்ப்பு கூறலாம் என்று அமுலாக்கப்பட்டுள்ளது. சீக்காடு தென்மண்டலம் முன்சீப் திரு. வி. பி. ஸ்ரீவத்சவா என்பவர் அப்பீல் செய்த போது, தமிழில் தீர்ப்பு கூறியதை ஏற்க முடியாது, ஆங்கிலத்தில் அனுப்பும்படி கேட்டிருக்கிறார். இது அரசுக்குத் தெரியுமா? என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதைப் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. விசாரித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட தீர்ப்பு சம்பந்தமான விவரங்கள் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், தமிழ் ஆட்சி மொழி ஆவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போது, நீதித் துறையிலே தமிழை இன்டட்ரொடியூஸ் (:(ntroduce)) பண்ணுவதற்கு வேண்டிய திட்டவட்டமான நடவடிக்கை என்ன எடுக்கப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இப்போது கிரிமினல் கோர்ட்டுகளிலே தமிழில் தீர்ப்பு வழங்கலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. சிவில் கோர்ட்டுகளிலே சட்டங்கள் இன்னும் தமிழில் மொழிப்பெயர்க்கப் படாததினால், இன்னும் அதற்கான உத்தரவு போடப்படாமல் இருக்கிறது. இதன் விளைவுதான் இப்போது இந்த 4, 5 மாதங்களுக்கு முன்புவந்துள்ள தீர்ப்பாகும்.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, இந்த தமிழ் ஆட்சி மொழிக் குழு இதுவரையில் எத்தனை வெளியீடுகளை வெளியிட்டிருக்கிறது? அப்படி வெளியிட்டிருந்தால், அவைகளையெல்லாம் அங்கத்தினர்களுக்கு அனுப்புகிற உத்தேசம் உண்டா? ஏனென்றால் அரசாங்கம் எத்தனையோ வெளியீடுகளை வெளியிட்டு வருகின்றது. பார்லிமெண்டிலே வெளியிடுகின்ற வெளியீடுகள் எல்லாம் அதன் அங்கத்தினர்களுக்கு அனுப்பப்படுகின்றது. அதைப்போல் கொஞ்சம் செலவானாலும் இந்தத் துறையிலும்

1978 செப்டம்பர் 2]

அங்கத்தினர்களுக்கு அனுப்பிவைப்பதால், அந்தந்தத் துறையிலே அனுபவம் உள்ளவர்கள் அதிலுள்ள குறைகளைச் சுட்டிக் காட்டவும், நல்லவைகளைப் பாராட்டவும் முடியும். எனவே, இந்த ஆட்சி மொழிக் குழுவின் சார்பாக வெளியிடும் வெளியீடுகளை எல்லாம் அங்கத்தினர்களுக்கு அனுப்பும் உத்தேசம் உண்டா? இல்லையென்றால், இனிமேலாவது அனுப்புவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இதுவரையிலே இந்தப் பழக்கத்தை யாரும் வைத்துக் கொண்டிருக்கவில்லை. அங்கத்தினர் அவர்கள் இப்போது இந்த யோசனை சொல்லியிருப்பதால், அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக மானியக்குழு சம்பள விகிதங்கள்

* வினா எண் 45—**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா: தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு U.G.C. scales of Pay கொடுக்க வேண்டும் என்று அரசு வற்புறுத்தி, மேற்படி நிர்வாகம் எழுத்து மூலமாக சம்மதம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டன என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மத்திய அரசினரால் குறிப்பிடப்பட்டு, மாநில அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரியர் நியமன வழிமுறைகள் ஆசிரியர்களுக்கான கல்வி யோக்யதாம்சங்களை ஏற்றுக்கொள்ளும் தனியார் கல்லூரி மற்றும் ஆசிரியர்கட்கு புதிய ஊதிய விகிதம் பொருந்தும் என்று ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, சில தனியார் கல்லூரிகளிலே யூ.ஜி.சி. ஸ்கேல் இன்னும் கொடுக்கப் படவில்லை. தனியார் கல்லூரிகளுக்கு கிராண்டு கொடுக்கின்ற போது, அவர்கள் அங்குள்ள ஆசிரியர்களுக்கு இந்த யூ.ஜி.சி.